★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆனி 10உ சனி (23—6—56) ★ ★ வெளியீடு : ஆனி 11உ ஞாயிறு (24—6—56) [இதழ் 8

ஆந்திர துறைமுக அபிவிருத்திக்கு டெல்லி நிதி உதவி!

கர்நூல், ஜுன் 22—

ஆந்திர மாநிலத்தில் உள்ள சிறிய துறைமுகங்களின் அபிவிருத்தி செய்வதற்காக டெல்லி சர்க்கார் இரண்டாம் திட்டத்தின்கீழ் ரூ. 28,10,000 வரை ஒதுக்கியுள்ளனர் என்று தெரியவருகிறது.

இந்த ஒதுக்கப்பட்டுள்ள நிதி, மத்திய சர்க்கார் கணக்கில் ஒதுக்கப்பட்டிருப்பதாயும், ஆந்திர மாநிலத்தின் திட்டம் ரூ. 119 கோடியாகவே இருக்கும் என்றும் தெரிகிறது.

சேதுபதி கூற்று கேட்டு சிரித்தார் நிதி மந்திரி!

ஊருக்கு உபதேசம் செய்யுமுன்...

சென்னை சர்க்காருக்கு டாக்டர் இலட்சுமணசாமி இடித்துரை

சென்னை, ஜுன் 23—

"அனைவரையும்விட அதிகம் பேரை வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கும் பெரிய எசமானன மாநில அரசினர், மற்ற முதலாளிகளை அவர்களின் தொழிலாளர்களுக்கு அதிக வசதிகள் செய்து தரும்படி கேட்பதற்கு முன், முதலில் தங்களின் ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும்,"

என்று சென்னை பல்கலைக் கழகத் துணைத் தலைவர் டாக்டர் ஏ இலட்சுமணசாமி அவர்கள், சென்னை அரசாங்க அலுவலகச் சங்கக் கூட்டத்தில் வற்புறுத்தினார்.

"சென்னை அரசாங்க அலுவலகத்தைப்போல அவ்வளவு நல்ல முறையில் பணியாற்றும் அரசாங்க அலுவலகம் இந்தியாவில் எங்கும் கிடையாது" என்றும், அவர் குறிப்பிட்டார்.

சுதந்திர நாடுகளென இந்தியா ஒப்புதல்

புதுடில்லி, ஜுன் 20—

டுனிசியாவும், மொராக்கோவும் சுதந்திர நாடுகளென இந்தியப் பேரரசினர் அங்கீகரித்துள்ளதாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'தட்சிணப் பிரதேச ஏற்புக்கு ரூ. 100 கோடி தரும் பேச்சை நான் கேட்டறியேன்'

'மாகாண சீர்திருத்தப் பேச்சு கிளம்பும் முன்னரே இரண்டாம் திட்ட நிதி ஒதுக்கல் தீர்ந்துவிட்டதே'

மத்திய நிதி மந்திரி தேஷ்முக் தெளிவுபடுத்துகிறார்

'தட்சிணப் பிரதேசம் அமைக்கும் ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்வதானால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மேலும் ரூ. 100 கோடி ஒதுக்க இந்திய அரசாங்கம் தயாராக இருக்கிறது' என்ற ஒரு தகவலை, சென்னை மராமத்து மந்திரி இராசேசுவர சேதுபதி கூறி இருந்தார். அதைக் குறித்து சென்னை வந்துள்ள மத்திய அரசாங்க நிதி அமைச்சர் தேஷ்முக் அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் கூறியதாவது :—

"அதை ஒரு முறையாகக் கொண்டு நிதி ஒதுக்கப்படவில்லை ; அவர் (சேதுபதி) அவ்வாறு நிலைமையை உண்மையில் உணர்ந்துகொண்டு இருக்கலாம். எப்படி இருந்தாலும் அவருடைய கூற்றுக்குத் துளியும் ஆதாரம் கிடையாது.

"தட்சிணப் பிரதேச ஏற்புக்கும், திட்டத்திற்கு நிதி ஒதுக்குவதற்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது.

"திட்டத்திற்குப் பணம் ஒதுக்கும் வகையில், மாகாண சீரமைப்புப் பற்றி குறிப்பிடப்பட்டதாக நான் எதுவும் கேள்விப்படவில்லை.

"திட்டத்தின் முழு விவரங்கள் விவாதிக்கப்பட்ட நேரத்தில், மாகாண சீரமைப்பு குறித்து எந்தவித யோசனையும் கிளம்பவில்லை

'மாகாண சீரமைப்பு ஆலோசனைக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்பாகவே, நிதி ஒதுக்கலின் தொகை விவரம் திட்டமாக நிர்ணயிக்கப்பட்டு விட்டது."

முடிவு மாறுதாம்!

சென்னை, ஜுன் 22—

1957 ஏப்ரல் திங்கள் முதல் தசாம்ச நாணய முறையை அமுலுக்குக் கொண்டுவர அரசியலார் செய்துள்ள முடிவு மாறாதென மத்திய நிதியமைச்சர் சி. டி. தேஷ்முக் அறிவித்திருக்கிறார்.

'இலங்கைத் தமிழரை படுகொலை புரிவதை எவர் தட்டிக்கேட்டார்?'

'4 குஜராத்தியர் கொல்லப்பட்டிருந்தால் நேருவின் மனம் குமுறாதா?'

'வட நாட்டவர் தென்னாட்டின் 'கர்த்தர்'கள் என்று பேசுவது எப்படிப் பொருந்தும்?'

'சாதிபேதங்கள் ஒழிந்த நாகரீகநிலை மலர வேண்டுமென்பது நாத்தீகமா'

திருவில்லிப்புத்தூர் பொதுக்கூட்டத்தில்

அண்ணா கேள்வி

"இன்று இலங்கையில் தமிழர்களை நடுவீதியில் குப்புறப் போட்டு அடிக்கிறார்கள்! இராணுவத்தை ஏவி, படுகொலை புரிகிறார்கள்! இதுவரை பலர் பலியானதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. பண்டாரநாயகா சர்க்கார் நடத்தும் இந்தக் கொடுமையை யார் தட்டிக் கேட்டார்கள்? பண்டித நேரு ஒரு சிறு அறிக்கை விடுத்தாரா? அல்லது காமராசர்தான் கண்ணீர் வடித்து, பிரதமர் நேருவிடம் கேட்டாரா—'எங்கள் தமிழர்களை இப்படிக் கொடுமைப்படுத்துகிறார்களே, என்ன செய்யப் போகிறீர்கள்?'—என்று! எவருக்கு, இலங்கை நிலையால் மனம் குமுறியிருக்கிறது? நாலு குஜராத்தியர்கள் எங்காவது வெளிநாட்டில் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தால், நேரு வாளாவிருந்திருப்பாரா? அவர் மனம் பதறியிருக்காதா? கண்டனக் கணைகளை ஏவியிருக்கமாட்டாரா?

"இப்படிப்பட்டவர்கள்தான், தமிழகத்தின்—தென்னாட்டின் 'கர்த்தர்'கள் என்று பேசுகிறார்களே! இது எப்படிப் பொருந்தும்?"

என்று, திருவில்லிபுத்தூரில், 15—6—56 அன்று, அண்ணா அவர்கள் பேசும்போது குறிப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து பேசியதாவது :—

'ஆயிரம் உண்டிங்கு சாதி' என்று கூறி, 'எனின், அன்னியர் வந்திங்கு புகல் என்ன நீதி?'—என்று பாடினான் பாரதி!

'என் வீடு ஓட்டையாய்த்தான் இருக்கும்; ஆனாலும், பெய்யும் மழை எப்படி என் வீட்டினுள் நுழையலாம்?'—'பாம்புப் புற்று இருக்கத்தான் செய்யும்; ஆனாலும், பாம்பு எப்படி வரலாம்?'—என்று கேட்பதைப்போல்தானே, இது இருக்கிறது?

எந்த ஒரு நாட்டு மக்கள் பேதப்பட்டு—பிளவுபட்டுக் கிடக்கிறார்களோ, அந்த மக்களை, வேறு நாட்டவரில் சிலர் கட்டுப்பாடாகப் புறப்பட்டு முயற்சித்தால் சுலபத்தில் அடிமை கொண்டுவிட முடியும் என்பதுதானே, சரித்திரம் தரும் சேதியாக இருக்கிறது? அப்படியிருக்க, 'ஆயிரம் உண்டிங்கு சாதி; எனின், அன்னியர் வந்து இங்கு புகல் என்ன நீதி?'—என்று பேசுவது எப்படிப் பொருந்தும்?

ஆயிரம் சாதிகளாக மக்கள் ஏன் பிளவுபட்டுக் கிடக்கவேண்டும்? இந்தப் பிளவுகள் ஒழிக்கப்படவேண்டியவை அல்லவா? இந்தப் பிளவுகள் ஒழிந்து மக்கள் எல்லாம் ஒரு சமுதாயமாக உருவானாலன்றி, ஒரு நாடு எப்படி, பிறர் தன்னை அடிமை கொள்ளாமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்?

"சாதி என்ற சொல்லே தமிழ்ச் சொல் அல்ல! பண்டைத் தமிழகத்தில் இப்படி சாதிப் பிரிவுகள் இருந்தன என்று கூற ஆதாரங்களே கிடையாது.

அப்பூதி நாதர், இன்னுயிர்முத்து என்பனபோன்ற பெயர்களும், பழந் தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை.

இன்று இந்த நாட்டில் எவரை யாவது பார்த்து, 'நீ யார்?' என்று கேட்டால், என்ன பதில் வருகிறது?

நான்—பிள்ளை; நான் - முதலியார்; நான் நாடார்; நான்-படையாச்சி என்று, சாதிதான் முதலில் வருகிறதே தவிர, மனிதன் கடைசியில்தானே வருகிறான்? இந்த இழிநிலை மாறி, 'இந்த நாட்டவர் அனைவரும் மனிதர்கள்-அனைவரும் ஒரே குலம்' என்ற எண்ணம் பெற வேண்டாமா? அந்த நாகரீக நிலையைத் தமிழகம் — தென்னகம் விரைவில் பெற வேண்டுமென்றுதானே கழகம் கூறுகிறது? நாம் இப்படிக் கூறுவது கேட்டு, என் சிலர் மிரள வேண்டும் என்பதுதான் நமக்குப் புரியவில்லை. இதனைக் கூறுவதினாலேயே நம்மை எல்லாம் 'நாத்தீகர்கள்' என்று மக்களிடத்தில் காட்டிக்கொடுத்து விடலாம் என்று சிலர் கருதுவார்களேயானால், நிச்சயம் அவர்கள் ஏமாறுவர்!

இன்று நமது கழகம், தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவு செய்திருக்கிறது. இது கேட்டு சிலர், பட்டாசு வெடிச் சத்தம் கேட்டு, வாலைத் தூக்கியும், காலைத் தூக்கித் தள்ளியும், குதித்து ஆடி மிரண்டு ஓடும் காளை மாடுபோல, ஏனோ ஓடுகிறார்கள் ?

(4-ம் பக்கம் பார்க்க)

ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. மீதுள்ள வழக்கு

உயர் நீதிமன்றத்தின் உத்தரவு

சென்னை, ஜுன் 22—

தேவிகுளம், பீர்மேடு தமிழ் நாட்டுடன் இணையவேண்டுமென்று கடந்த 20—2—56ல் நடந்த அர்த்தாலின்போது கடலூர் கடைத் தெருவில் உள்ள திரு ஆறுமுகப் படையாட்சியின் பூக்கடையை மூடும்படி கேட்டபோது, அவர் மறுத்துவிட்டார்; தொடர்ந்து அவர் கடையில் இருந்த சாமான்களையும், பூக்களையும் நாசம் செய்ததாகவும், ரூ 166—10—6 பணத்தையும் எடுத்துக்கொண்டதாகவும் குற்றம் சாட்டி தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., ஆகிய 8 பேர் மீது கடலூர் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில், கடலூர் போலீசாரால் இந்திய குற்றச் சட்டத்தின் 147 - (சட்ட விரோதமான கூட்டம்), 427 (பொருளுக்கு நஷ்டம் செய்தல்), 395 (கொள்ளை யடித்தல்) பிரிவுகள்படி வழக்குத் தொடரப் பட்டது.

கடலூர் சப் - மாஜிஸ்திரேட், 147, 427 பிரிவுகளை குற்றப் பத்திரிகையில் சேர்த்து, தன் முன்பாகவே விசாரணைக்கு வைத்துக் கொண்டு, 395 பிரிவை (கொள்ளை யடித்தல்) குற்றப் பத்திரிகையில் சேர்க்காமல் விட்டுவிட்டதின் பேரில் கடலூர் மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு, சர்க்கார் தரப்பில் 'ரிவிஷன் மனு' போடப்பட்டது.

மாவட்ட மாஜிஸ்திரேட் 395-பிரிவையும் குற்றப்பத்திரிகையில் சேர்த்து, வழக்கை கடலூர் செஷன்ஸ் கோர்ட்டுக்கு விசாரணைக்காக மாற்றிவிட்டார்.

இதனை எதிர்த்து, தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., மற்ற தோழர்கள் சார்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 'ரிவிஷன் மனு,' இன்று, கனம் நீதிபதி பஷீர் அகமதுசையத் முன்னிலையில் விவாதிக்கப்பட்டது.

'மாவட்ட மாஜிஸ்திரேட் 395-பிரிவை குற்றப்பத்திரிகையில் சேர்த்து செஷன்ஸ் கோர்ட்டில், வழக்கை விசாரணை செய்ய வேண்டு'மென்று பிறப்பித்த உத்திரவுக்கு எதிராக, கனம் நீதிபதி அவர்கள் தற்காலிகத் தடை உத்திரவு பிறப்பித்து, மேற்கொண்டு உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு சர்க்கார் தரப்புக்கு 'நோட்டீஸ்' தரும்படி உத்தரவிட்டார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ, இந்த எதிரிகள் சார்பில் வழக்கறிஞர்கள் திரு. கே. நாராயணசாமி முதலியாரும், திரு நா. வேணுகோபால் நாயகரும் வாதாடினர்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 23—6—'56 சய

விலை ஏற்ற அவதி!

"உணவு உற்பத்தி—அதைப் பெருக்குவதுதானே, எங்கள் முதல் வேலையாக வைத்துக் கொண்டிருக்கிறோம்.

"'அதிக உணவு உற்பத்திச் செய்யுங்கள்'—என்று ஒரு திட்டம்.

"'ஜப்பான் முறையில் உணவு உற்பத்திச் செய்யுங்கள்'—என்று ஒரு திட்டம்.

"'விஞ்ஞான முறைப்படி, தழையிட்டு, இராசயன எருவிட்டு, உரமிட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்'—என்று ஒரு திட்டம்.

"இவைபோன்ற திட்டங்கள் மட்டுமின்றி, இவற்றிற்கெல்லாம் மேலாக, ஐந்தாண்டுத் திட்டங்கள் — ஒன்றன்பின் ஒன்றாக!

"உணவு உற்பத்தித் துறையிலும், இதர துறைகளைப் போலவே இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது. உற்பத்திக்காக விதிக்கப்பட்டிருந்த இலட்சிய எல்லையை மீறுகிற அளவு உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது.

"சர்க்காரிடம் ஏராளமான அளவு உணவுப் பண்டம் சேமிப்பாக இருக்கிறது.

"வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவு நம் நாட்டில் உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது,"

என்று, டெல்லியிலும், சென்னையிலும் உள்ள மந்திரிமார்கள், பல்வேறு கால கட்டங்களில், விடாமல் தொடர்ந்து, தங்களின் 'அரிய சாதனை'களை விளக்கும் 'பட்டியலில்' சேர்த்துச் சேர்த்துப் பேசி வந்திருக்கின்றனர்—வருகின்றனர்.

உண்மையில் உணவு உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதை—மக்களில், பற்றாக்குறை உணவுடன் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள், மேலும் தேவையான அளவு உணவுபெற முடிகிறது—உணவுப் பொருளின் விலை மலிந்துள்ளது என்ற நிலையைக் கொண்டுதான் கணக்கிடப்பட வேண்டுமே தவிர, ஏட்டளவில் உள்ள புள்ளி விவரங்களைக் கொண்டு கணக்கிடப்படக்கூடாது என்று கூறுவர்; நியாயமும் அதுதான். உற்பத்திப் பெருக்கம், நடைமுறையில் மக்களின் உணவுத் தேவையை நியாயமான செலவில் பூர்த்தி செய்து தராத வரையில், பயனுள்ளது எனக் கொள்ள முடியாது.

உணவு தேவையான அளவு கிடைக்க வேண்டும்—அதுவும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும். அப்படிக் கிடைக்கிற உணவைப் பெறுவதற்கு, மக்கள் அனைவருக்கும் உழைப்பின் மூலம் வருமானத்திற்கு வழியும், உறுதி செய்து தரப்பட வேண்டும்; அப்போதுதான், மக்கள் வாழ்வு பெற முனைய முடியும். 'உணவு உற்பத்தியைப் பெருக்குகிறோம்' என்று கூறி திட்டங்களைத் தீட்டி, அவற்றின் இலட்சிய அளவுகளை எட்டிப் பிடித்து, உணவுப் பொருளைக் கிடங்குகளில் குவித்து விடுவதின் மூலமே மக்களின் உணவுப் பிரச்சினைக்குப் பரிகாரம் தேடிவிட்டதாகக் கருதிவிட முடியாது.

உணவுப் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்ற நிலை—வீதியில் எறியப்படும் எச்சிலையில் உள்ள மிச்சம் மீதிக்காக நாயோடு போராடும் மனித ஜீவன்கள், பிச்சைக்காரர்கள் என்று இல்லாமல் செய்யப்பட்டு, அவர்களுக்கெல்லாம் உழைக்க வேலையும், அதன் மூலம் வருமானத்திற்கு வழியும் என்று செய்யப்படுகின்றதோ, அன்றுதான் மலரமுடியும். அதற்கிடையில், 'உணவு உற்பத்தி பன்மடங்கு பெருகியுள்ளது' என்ற புள்ளி விவரங்களைக் காட்டிப் பெருமை கொள்வது, மக்களை ஏமாற்ற முயற்சிக்கும் வேலையாகும்.

'உணவு உற்பத்திப் பெருகிவிட்டது; ஏற்றுமதி செய்யக்கூடிய அளவு உணவுப் பொருள் கையிருப்பில் இருக்கிறது,' என்று சர்க்காரின் அகண்ட பிரச்சார சாதனங்கள் நீட்டி முழக்கிக்கொண்டிருக்கும்போதுதான், கடந்த ஆறு கிழமைகளுக்கு முன்பிருந்தே விலைவாசிகள் —குறிப்பாக உணவுப் பொருள்களின் விலைகள் விஷம்போல் ஏறத்தொடங்கிற்று. இன்று வரை விலை ஏற்றம் தடுக்கப்படவில்லை, சர்க்காரால்!

மூன்று திங்களுக்கு முன்பு 60 படிகொண்ட அரிசி மூட்டை ரூ. 42 ஆக இருந்தது இப்போது ரூ. 58 ஆக உயர்ந்திருக்கிறது, தமிழ் நாட்டில்! இது போலவே புளி, மிளகாய், எண்ணெய் வகைகள், இதர பொருள்களின் விலையெல்லாம் கூட ஏறிவிட்டன, பலமடங்கு!

இந்த விலை ஏற்றம் குறித்து சர்க்கார் கவலைப்படுவதாகவும், நடவடிக்கை எடுப்பதில் தீவிரமாயிருப்பதாகவும் விளம்பரப் படுத்திக்கொள்கிற அளவு, நிலைமை கட்டுப்பட்டதாகத் தெரியக் காணோம்; விலை ஏற்றம், சாதாரண ஏழை எளிய-நடுத்தர மக்களை எத்தனை தூரம் பாதிக்கும்—என்பதை,முன்பே எடுத்துக் காட்டியிருந்தோம்.

சர்க்கார், இன்னும் விலைவாசி ஏற்றத்திற்கான உண்மைக் காரணத்தையே கண்டுபிடித்ததாகக் காணோம்!

'வியாபாரிகளில், கொள்ளை இலாபமடிக்கும் நோக்கம் கொண்டோர், அரிசியைப் பதுக்கி வைக்கின்றனர்' என்று சர்க்கார், கைகாட்டுகிறது. வியாபாரிகளோ. 'இரயில்வே இலாகாவினர் போதுமான போக்குவரத்து வசதி செய்து தாவில்லை—அரிசியை இடமாற்றம் செய்து விற்பனைக்குத்தர'—என்கிறார்கள். வேறு சில வியாபாரிகளோ, 'விவசாயிகளே உணவுப் பொருளைப் பதுக்கி வைத்து, தட்டுப்பாடு ஏற்படும்போது அதிக விலைக்கு விற்க எண்ணுகின்றனர்' என்று குற்றம் சாட்டுகின்றனர்.

இப்படி, விலை ஏற்றத்திற்கு எவர் மூலகாரணமானவர் என்பதையே சர்க்கார் இன்னும் திட்டமாகத் தெரிந்துகொள்ளவில்லை என்று தெரியவருகிறது. இத்தகு சர்க்காரின் அறியாமையாலும், அசமந்தத்தாலும், மக்கள் படும் அவதி சொல்லுந்தரமன்று!

கையிருப்பிலிருக்கும் அரிசியை நியாய விலைக்குத் தாராள விற்பனைக்கு அனுப்புவதின் மூலம், விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தப் போவதாக மத்திய உணவு இலாகா உதவி மந்திரி கூறியிருக்கிறார். இந்த முயற்சி, எத்தனை சீக்கிரம் மேற்கொள்ளப்பட்டு, எத்தனை சதவிகித வெற்றியைப் பெறுகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தி, மக்களின் அவதியைத் துடைக்க முடியாத சர்க்கார், தம் பொறுப்பை எவர் மீதேனும் சுமத்திவிட்டு, தம் 'பெயரை'க் காப்பாற்றிக் கொள்ள நினைப்பதை, மக்கள் அனுமதிக்கப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

தொழிலாளருக்குக் குடியிருப்பு வசதி

புதுடில்லி, ஜுன் 21—

மத்திய சர்க்கார் சுமார் ரூ 36,50 000 செலவில், சென்னை துறைமுக 'டிரஸ்ட்' தொழிலாளர்களுக்கு 500 குடியிருப்புகள் கட்டித் தரும் திட்டத்தை அனுமதித்துள்ளனரென்றும், விரைவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்றும் கூறப்படுகிறது.

சென்னை தண்டையார்பேட்டையிலுள்ள 40 ஏக்கர் நிலத்தில் இந்தக் 'காலனி' அமைக்கப்படுமென்றும், மூன்று பொது பூங்காக்களும், ஒரு விளையாட்டுத் திடலும், ஒரு பள்ளியும், ஒரு மருத்துவமனையும் இடம் பெறும் என்றும் கூறப்படுகிறது.

அமைச்சரவையைக் கலைக்க வேண்டுமாம்!

குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற வேண்டுமாம்!

அம்பாலா, ஜுன் 21—

பஞ்சாப் மாநிலத்தில் இன்றைய நிலையில் ஏற்பட்டுள்ள குழப்பமான நெருக்கடியைத் தவிர்க்க பஞ்சாப் அமைச்சரவை கலைக்கப்பட வேண்டுமென்றும், குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற வேண்டுமென்றும் மகா பஞ்சாப் செயற்குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

20 நாகர்கள் பலி!

ஷில்லாங், ஜுன் 21—

நாகமலையில் நாக கிளர்ச்சிக்காரர்களுக்கும்— இராணுவத்தினருக்குமிடையில் நேற்று நடைபெற்ற போரில் கிளர்ச்சிக்காரரில் 20 பேர் இறந்துவிட்டதாக கோகிமாவிலிருந்து தகவல் கிடைத்துள்ளதாம்.

சமத்துவத்தின் பொருள் என்ன?

நோபல் பரிசு பெற்ற மேதையின் விளக்கம்

"சமத்துவம்பெற வேண்டுமென்றால், ஒருவருக்கு அதற்கு தகுதி இருக்கவேண்டும். சமத்துவத்துக்குத் தகுதி இருக்கவேண்டுமென்றால் அது என்ன என்பதை ஒருவர் உணர வேண்டும். சமத்துவம் என்பதாகத் தன்னந்தனியே ஒன்று இல்லை. அநீதி, அடக்குமுறை, பலாத்காரம் முதலியவற்றின் பீதியில்லாமல் ஒருவரின் தகுதிக்கும் திறமைக்கும் தக்கவாறு வாழ்க்கையைச் செம்மையாக்குவதற்கு உரிமை—வசதி ஆகியவற்றின் சமத்துவம் தான் உண்டு.

இவ்வாறு, அமெரிக்க நாவலாசிரியரும் நோபல் பரிசி செற்றவருமான வில்லியம் பால்க்னர் குறிப்பிட்டுள்ளார்.

அறநிலைய சொத்துக்களை சமூக நலனுக்குப்பயன்படுத்த!

இந்திய அரசாங்கத்தின் புதிய மசோதா

இந்துமத அறநிலைய—ஆலயங்களின் சொத்துக்களை ஒழுங்குபடுத்திச் செலவிடுவதற்கான மசோதா ஒன்று, அடுத்த மக்கள் சபை கூட்டத்தில் இந்திய அரசாங்கம் கொண்டுவர இருப்பதாகத் தெரிய வருகிறது.

ஏறத்தாழ ரூ. 800 கோடி முதல் 900 கோடி வரையில் மதிப்பிடக்கூடிய நிலையில் பணமும்—சொத்துக்களும் இந்து அறநிலையங்களிடம் இருந்து வருகிறது எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்தச் சொத்துக்களை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தினால், வேறு பயனுள்ள வகைகளில் செலவிடுவது சாத்தியமாகும் என எண்ணப்படுகிறது.

நிர்வாக சீர்கேட்டிலும்கூட, மேற்படி சொத்துக்களிலிருந்து கிடைத்துவரும் ஆண்டு வருமானம் ரூ. 30 கோடி இருக்கும் என நம்பப்படுகிறது.

அறநிலைய சொத்துக்களை ஒழுங்கான முறையில் நிர்வகித்து வருவதற்கும், அதன் வருமானங்களை சமூகநலத் துறைகளில் செலவழிப்பதற்கும் மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரம் தரும் வகையில், இயற்றப்படும் சட்டம் இருக்கும் எனக் கருதப்படுகிறது.

மனவேதனையுற்ற காலம் மாறிவிட்டதாம்!

பாழடைந்த கிராமங்கள் புதுப்பிக்கப்படுகின்றனவாம்!

ஒரு பானை குடிதண்ணீருக்காக ஒரு காதம் தூரம் நடந்து சென்ற காலம் இப்போது மாறிவிட்டதாம்!

'... குட்டைத் தண்ணீரைக் குடிக்க வேண்டியிருக்கிறதே' என்று, மனம் புழுங்க வேண்டிய அவசியம் இப்போது இல்லையாம்!

'சமுதாய நலத்திட்ட கிராமங்களில் 1955 டிசம்பர் கடைசி வரையில் புதிதாக மொத்தம் 30,000 கிணறுகள் தோண்டப்பட்டன 51,000 கிணறுகள் புதுப்பிக்கப்பட்டன; ஆயிரக் கணக்கான பாழடைந்த கிராமங்கள் புதுப்பிக்கப்பட்டன' என்று கூறப்பட்டுள்ளது

மக்களின் சுயமுயற்சிகளின் காரணமாக, கிராமங்கள், வசதியான நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றனவாம்!

பணத்தைப் பறிகொடுத்த பரிதாபச் சம்பவம்

இரயில்வே குமாஸ்தாவிடம் கொள்ளையர் தந்திரம்

பம்பாய், ஜுன் 21—

மத்திய இரயில்வேயைச் சேர்ந்த குமாஸ்தா ஒருவர் பம்பாய் ரிசர்வ் பாங்கியில் ரூ 44,000 பெற்றுக்கொண்டு, ஒரு ஆயுதம் தாங்காத இரயில்வே போலீஸ்காரருடன் வெளியே வருகையில் வழிப்பறி கொள்ளையர்களிடம் பணத்தை பறிகொடுத்தார்.

பணத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்த அவர் வெளியே நிற்கும் மோட்டார் 'வான்' அருகே செல்லும்போது வழிப்பறிக்காரர்கள் மூவர் அவரை அணுகியதாகவும், ஒருவர் பேச்சுக்கொடுக்க, மற்றவர் பணப்பையை பறித்துக் கொண்டோடியதாகவும், ஆனாலும் இரயில்வே போலீஸ்காரர் அவரைப் பிடித்துவிட்டதாகவும், பிடிபட்டவரிடம் பணப்பை இல்லை என்றும் மற்றொருவரின் கைக்கு அது சென்றிருக்கவேண்டுமென்றும் கூறப்படுகிறது.

கைதிகளுக்கு கசையடி

சண்டிகர் ஜுன் 19—

குற்றம் புரிந்த கைதிகளுக்கு சிறைச்சாலைகளில் கசையடி கொடுக்கும் தண்டனையை பஞ்சாப் அரசினர் ஒழித்துவிட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

சூரியசக்தி மூலம் மின்சார உற்பத்தி

அதன்மூலம் ஆராய்ச்சி விமானம் பறக்க விடப்பட்டதாம்!

நியூயார்க், ஜுன் 21—

சான்பிரான்சிஸ்கோவில், சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்திச் செய்து, அதனால் ஒரு மாதிரி விமானமும் பறக்கவிடப்பட்டதாம் வடஅமெரிக்க விமான ஆராய்ச்சிக் கட்டுரை சங்கத்தைச் சேர்ந்த 500 உறுப்பினர்கள் முன்பாக இந்த ஆராய்ச்சி மாதிரி விமானம் பறக்க விடப்பட்டதாம்.

'சிலிகன்-சோலார்-செல்' என்பதைக் கொண்டு கதிரவனின் சக்திகள் மின்சார சக்தியாக மாற்றப்பட்டு, விமான எஞ்சின்களை இயங்கச் செய்கிறதாம் இந்த 'செல்' எஞ்சின்களை இயக்கச் செய்கிறதே தவிர, ஒரு விமானத்தை பறக்கச் செய்ய இயங்குமா என்பது ஆராயப்பட்டு வருகிறதாம்

இல்லங்களின்மீது இந்த 'செல்'லைப் பொருத்தவைத்து மின்சாரத்தைப் பெறுவது வெகுவிரைவில் சாத்தியப்படுமென கூறப்படுகிறது.

மக்கள் எதிர்ப்புக்கு கம்யூனிஸ்டுகள் பணிவு

'கொள்ளை'யிட்ட சொத்துக்களை திருப்பித் தர முடிவு

இரங்கூன், ஜுன் 20—

பலாத்காரத்தைக் கைவிட பர்மா கம்யூனிஸ்டுகள் முடிவு செய்துவிட்டதாகவும், மற்ற அரசியல் முறைகளைக் கையாண்டு மக்கள் புரட்சியை உண்டுபண்ணப்போகிறார்களென்றும், நிலச்சுவான்தார்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலம், சொத்து, விவசாய சாதனங்களைத் திருப்பித்தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்றும், பா-சா-வின் பக்காக்கூ என்ற நகர கம்யூனிஸ்டு கட்சி கமிட்டியின் தலைவர் தெரிவித்துள்ளாராம்.

இந்தியாவுக்கு நிபுணர் குழுக்கள் வருகின்றன!

புதுடில்லி, ஜுன் 21—

கனரக இயந்திரங்கள் தயாரிப்பு பற்றி இந்தியப் பேரரசினருக்கு ஆலோசனைகூற ரஷ்யாவிலிருந்தும், பிரிட்டனிலிருந்தும் நிபுணர் குழுக்கள் விரைவில் வருமெனத் தெரிகிறது.

சிவப்பு மண் கலந்த வெற்றிலை 'பீடா'!

சுவாசப்பை நோய்கள் ஏற்படுமென எச்சரிக்கை

இந்தூர், ஜுன் 21—

இந்தூர் சாலைகளில் பொதுமக்கள் துப்பும் வெற்றிலை-பாக்கு எச்சில், ஏன் அதிக சிவப்பாகவுள்ளது?—என்பதை நகரசபை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனராம்! வெற்றிலைப் பாக்குக் கடைக்காரர்கள், சுத்தைக் காம்புடன் சிவப்பு ரக மண்ணைக் கலந்து 'பீடா'வில் போட்டுத் தருவதே இதற்குக் காரணமாம்!

மண் கலந்த 'பீடா'வைச் சுவைப்பதால், க்ஷயம் போன்ற சுவாசப்பை சம்பந்தமான நோய்கள் வரக்கூடுமென டாக்டர்கள் எச்சரித்துள்ளனராம்.

பலகட்ட விற்பனை வரிக்கு எதிர்ப்பு

வட ஆற்காடு மாவட்டத்தில் பிரச்சாரக் குழு விளக்கம்

வாணியம்பாடி, ஜூன் 15—

சென்னையில் ஜூன் 26-ல் நடைபெறப் போகும் பல கட்ட விற்பனை வரி எதிர்ப்பு மாநாட்டில், 'வர்த்தகர்கள் தேர்தலில் ஈடுபடுவதா இல்லையா?' என்பதை முடிவு செய்யத் தீர்மானித்து இருப்பதாலும், சென்னையில் 'தமிழ்நாடு வர்த்தக கழகத்திற்கு ரூ 6 இலட்சத்திற்கு சொந்தத்தில் தலைமை நிலையமும், எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் கழகப் பணியினைக் கவனிக்க ரூ 4 இலட்சம் செலவில் சொந்தக் கட்டிடங்கள் வாங்கவும் திட்டமிடப்பட்டிருப்பதால் அதற்காக வர்த்தகர்களிடம் பங்கு 1-க்கு ரூ. 10 வீதம் ஒரு இலட்சம் பங்குதாரர்களை சேர்க்கவும், மாநாட்டிற்குத் தமிழ் நாட்டிலுள்ள வர்த்தகர்கள் ஏராளமான பிரதிநிதிகளை அனுப்பவேண்டிய அவசியத்தை விளக்கவும், அரசாங்கம் தாங்கள் ஏற்கவேண்டிய பழிகளை எல்லாம் பொதுமக்களின் கண்களை துடைப்பதற்காக வர்த்தக சமுதாயத்தின்மீது சுமத்துவதைப் பொதுமக்களுக்கு விளக்குவதற்கும், 'தமிழ் நாடு வர்த்தக கழக'த்தால் நியமிக்கப்பட்டுள்ள பிரச்சாரக் குழுவினர்களான திருவாளர்கள் கேசவலால் காளிதாஸ் சேட், வே. ச. விசுவநாதம் ஆகியவர்கள் கடந்த ஜூன் 10 முதல் 14-ந் தேதி வரையில் வடாற்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்ட ஊர்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றினர்:—

வேலூர்:

ஜூன் 10-ந் தேதி காலை 10-மணிக்கு வேலூர் இலட்சுமணசாமி டவுன் ஹாலில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு திரு அப்துல் கபூர் (சாயபு) தலைமை தாங்கி வியாபாரிகள் சட்டசபைதேர்தலில் போட்டியிடவேண்டுமென்று கூறினர். பிரமுகர்கள் பலர் பேசினர்.

ஆற்காடு:

அன்று மாலை 3 மணிக்கு ஆற்காடு மண்டி வீதியில் போடப்பட்டிருந்த பந்தலில், வர்த்தக சங்கத் தலைவர் திரு பத்மநாபம் (செட்டியார் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

இராணிப்பேட்டை:

அன்று இரவு 7 மணிக்கு வர்த்தக சங்கத் தலைவர் திரு அபிராம (அய்யர்) தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; நடைமுறை பிரச்சினை பற்றி தோழர்கள் விளக்கினர்.

காவேரிப்பாக்கம்:

ஜூன் 11-ல், சங்கத் தலைவர் திரு எம் குப்புசாமி (முதலியார்) தலைமையில் கூட்டம் நடைபெற்றது. வியாபாரிகளும் கடையடைப்பு செய்து கூட்டத்தில் கலந்து கொண்டனர். 'சென்னை மாநாடு—வர்த்தகர்களும் தேர்தலும்' என்னும் தலைப்பில் தோழர்கள் பேசினர்.

சோளங்கிபுரம்:

அன்று இரவு 7 மணிக்கு கடை வீதியில் போடப்பட்டிருந்த பந்தலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வர்த்தகர்கள் அனைவரும் பூரண கடையடைப்பு செய்து கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

சந்திப்பு

ஜூன் 12ல், ஆரணி, போளூர் நகரங்களிலுள்ள வர்த்தக கழக நிர்வாகிகள் ஆகியோரைச் சந்தித்து, மூன்றாவது மாநில மாநாட்டுக்கு வரவேண்டுமென்று 'பிரச்சாரக் குழு'வினர் அழைத்தனர்.

திருவண்ணாமலை:

மாலை 6மணிக்குபொதுக்கூட்டம் மண்டி வீதியில் போடப்பட்டிருந்த கொட்டகையில் நடைபெற்றது சங்கத் தலைவர் திரு. எஸ். கிருஷ்ணசாமி (முதலியார்) தலைமை வகித்தார். நிலைமையை விளக்கிப் பல தோழர்கள் பேசினர்.

பள்ளிகொண்டை:

ஜூன் 13ல், பள்ளிகொண்டை வர்த்தக கழகத் தலைவர்களுடனும், பிரமுகர்களுடனும் மாநாட்டின் அவசியத்தைக் குறித்து விளக்கியும், வற்புறுத்தியும் பிரச்சாரக் குழுவினர் கூறினர்.

குடியாத்தம்:

அன்று மாலை 5-30 மணிக்கு குடியாத்தம் பாலாற்றில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திரு. வி. கே. சாமிநாத (முதலியார்) தலைமை வகித்தார். பிரமுகர்கள் பலர், மாநாட்டின் அவசியத்தையும், வர்த்தகர்கள் அரசியலில் ஈடுபடவேண்டுமா? ஏன் ஈடுபடவேண்டும்? என்பதைக் குறித்தும், விளக்கவுரை ஆற்றினர்.

பேரணம்பட்டு:

ஜூன் 14 காலை 10-மணிக்கு பேரணம்பட்டு தோல்பதனிடும் வியாபாரிகள் சங்கக் கட்டிட ஆலில் வர்த்தகர்களின் கூட்டம் நடைபெற்றது. கலைவை ஏ. சு. பான் பாஷா சாயபு தலைமை வகித்தார். தோழர்கள் பலர் பேசினர்.

ஆம்பூர்:

அன்று மாலை 4-மணிக்கு இலட்சுமி தியேட்டரில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏராளமான வியாபாரிகள் கடையடைப்பு செய்து கூட்டத்தில் கலந்து கொண்டனர் திரு ஏகாம்பர(முதலியார்) தலைமை வகித்தார். பலர் பேசினர்.

வாணியம்பாடி:

அன்று இரவு 7-30 மணிக்கு பெரியபேட்டை பாலாற்றில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு. வே. ச. விசுவநாதம் தலைமை வகித்தார். எல்லா வியாபாரிகளும் கடையடைப்பு செய்து கூட்டத்தில் கலந்து கொண்டனர். பிரமுகர்கள் பலர் பேசினர்.

வர்த்தக சங்க நிகழ்ச்சிகளைச் சரியான முறையில் பிரசுரிக்காத பத்திரிகைகளை வியாபாரிகள் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், வர்த்தகர்களின் நலனுக்காக தமிழில் தினசரி ஒன்றும், ஆங்கிலத்தில் வார இதழ் ஒன்றும் நடத்த சென்னை மூன்றாவது மாநாட்டில் தீர்மானம் கொண்டுவர வேண்டும் என்றும் பேச்சாளர்கள் குறிப்பிட்டனர்.

'ஜனநாயக வாழ்வுக்காகவே இரத்தம் சிந்தி போராடினோம்'

'எல்லோருடனும் ஒத்துழைப்போம்; ஆனால் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க மாட்டோம்'

எகிப்தியப் பிரதமர் நாசர் முழக்கம்

"புரட்சியின் இலட்சியங்களைக் காப்பதற்காக புரட்சிக்காலத்தில் நாம் போராடினோம்; இறுதிவரையில் இரத்தம் சிந்தியே போராடினோம்;—எதற்காக? நிலையான ஜனநாயக வாழ்வை நாட்டில் ஏற்படுத்துவதற்காகத்தான்! கடுமையாகவும், கொஞ்சம்கூட ஓயாமலும் உழைத்தாலன்றி, சமூக நியதியை நாம் நிலைநாட்ட இயலாது; போராடினால் ஒழிய தேசிய வருமானத்தைப் பெருக்க முடியாது—மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியாது."

இவ்வாறு, சூயஸ்கால்வாய் பகுதியில் 75 ஆண்டு பிரிட்டிஷ் ஆதிக்கம் முடிவடைவதையொட்டி, எகிப்தில் குடியரசு சதுக்கத்தில் நடைபெற்ற பிரம்மாண்டமான தோர் கூட்டத்தில் பேசுகையில், எகிப்து பிரதமர் கர்னல் நாசர் முழக்கமிட்டுள்ளார்.

எகிப்தில் இராணுவச் சட்டம் ஒழிக்கப்பட்டுவிட்டதென்றும், இனி ஜனநாயக முறைப்படி ஆட்சி நடைபெறும் என்றும் குறிப்பிட்ட அவர், 'எல்லா நாடுகளுடனும் நாங்கள் ஒத்துழைப்போம்; ஆனால் எங்கள் கௌரவத்தையும், சுதந்திரத்தையும் விட்டுக் கொடுக்கமாட்டோம்' என்று அவர் கூறியபோது, மக்கள் பெருத்த ஆரவாரப் பேரொலியெழுப்பியுள்ளனர்.

வாழ்க்கை நிலை உயர ஆவன செய்வராம்!

அந்நிய மூலதனத்தையும் அனுமதிக்கக்கூடுமாம்!

புதுடில்லி, ஜூன் 20—

"மக்களுக்கு அவசியமான பயன்படும் பண்ட உற்பத்தியை தனியார் துறை பெருக்காவிட்டால், இதற்கு அரசியலார் வேறு முறைகளைக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும்," என்று, இந்திய தொழில், வர்த்தக அமைச்சர் டி டி. கிருஷ்ணமாச்சாரியார் எச்சரித்துள்ளார்.

"அரசியலாரே இதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டி வரலாம்; அல்லது இத்தொழிலில் நுழைய அந்நிய மூலதனத்தைக்கூட அனுமதிக்கலாம்; எப்படியும் இப்பண்டங்களுக்குள்ள அதிக கிராக்கியை சமாளித்துத்தானாக வேண்டும்.

"பொருளாதார முன்னேற்றம் பாமர மக்களுக்கும் பலன் தர வேண்டுமெனில், அவர்களின் வாழ்க்கை நிலை உயர்ந்தாக வேண்டும்; நீண்ட நாட்களாக அவர்கள் பயன்படுத்த எண்ணிய — ஆசைப்பட்ட சாதனங்கள் அனைத்தும் அவர்களுக்குக் கிடைக்கவேண்டும்."

'பழங் கதைகளை நினைப்பதில் பயனில்லை'

ஆற்றலை மக்கள் சுகவாழ்வுக்குப் பயன்படுத்த அறிவுரை

லண்டன் ஜூன் 19—

"ஒரு நாடு செய்துவிட்ட பழைய தவறுகளையே மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கொண்டிருப்பதில் பயனேதுமில்லை. தவறு செய்யாத நாடுதான் எது? மாறிக் கொண்டேவரும் இவ்வுலகில் பழங்கதைகளையெல்லாம் நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது. நமது ஆற்றலை மக்களின் சுகவாழ்விற்குப் பயன்படுத்தவே முனையவேண்டும்.

"மற்ற நாடுகள் இம்மாறுதல்களை உணராவிட்டால் அந்த நாடுகள் தங்களிடமோ அல்லது ரஷ்யாவிடமோ நேர்மையாக நடந்து கொள்ளவில்லையென்று கருதப்படும். பரபரப்பு நீடிப்பதற்கு அந்த நாடுகள் பொறுப்பாளிகளாக்கப்படும்."

என்று இந்திய துணை குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் மாஸ்கோ வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

கோழிக்குஞ்சியின் கருவிழி

டோக்கியோ, ஜூன் 20—

குருடான பெண்ணொருவள், கோழிக் குஞ்சியின் கண்ணினால், தான் இழந்த பார்வையை மீண்டும் பெற்றுவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

முழுக் குருடாகிவிட்ட 14 வயது நிரம்பிய பெண்ணுக்குக் கோழிக் குஞ்சியின் கருவிழியைப் பொருத்தி இழந்த பார்வையை தந்திருக்கிறாராம் ஜப்பானிய டாக்டர் ஒருவர்! இந்த முறையில் 'ஆபரேஷன்' செய்யப்பட்ட அப்பெண், தற்போது பள்ளிக்குப் போய்வருகிறாளாம்

மற்றைய பிராணிகளைவிட, கோழிக் குஞ்சியின் கருவிழிதான் மனித விழிக்கு ஒத்ததாக அமைந்துள்ளதென்று அந்த ஜப்பானிய டாக்டர் கூறினாராம்.

பத்திரிகைகளுக்கு வெளிநாட்டுப் பண உதவி

நேரு பண்டிதர் மறுத்துரைக்கிறார்

'வெளிநாட்டு சர்க்கார்கள் அல்ல — வெளிநாட்டுச் சக்திகளே உதவுவதாகக் கூறினேன்'

புதுடில்லி, ஜூன் 20—

'இந்தியாவில் உள்ள சில பத்திரிகைகளுக்கு, வெளிநாட்டு சர்க்கார் எதுவும் பணம் தந்து உதவி செய்து வருவதாக நான் கூறவே இல்லை' என்று, இந்தியப் பிரதமர் நேரு மறுத்துரைக்கிறார்.

'ரோஹ்தாக் எனும் இடத்தில், பத்திரிகைகளைப் பற்றி நான் வழங்கிய கருத்துகளை, ஒருவேளை பத்திரிகை நிருபர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையோ, என்னவோ?' என்றும் அவர் கூறியிருக்கிறார்!

"நான் கூறியதெல்லாம், 'டில்லியிலும் பஞ்சாபிலும் உள்ள சில பத்திரிகைகள் நாட்டில் குழப்பத்தையும், சீர்கேட்டையும் உண்டு பண்ணும்வகையில்ஏதேதோஎழுதி வருகின்றன; தவறான விஷயங்களை எழுதி, மக்கள் கருத்தை தவறான வழிக்கு இழுத்துச் செல்ல நினைக்கின்றன; இந்தப் பத்திரிகைகளில் சில வெளிநாட்டுப் பண உதவியையும் பெறுகின்றன — என்று! ஆனால், இந்தப் பணம் வெளிநாட்டு அரசுகளால்—சர்க்கார்களால் தரப்படுவதாக நான் ஒருபோதும் குறிப்பிடவில்லை; வெளிநாட்டுச் சக்திகள் சில, இந்தப் பத்திரிகைகளுக்குப் பணம் தருவதாகவே கூறினேன்," என்று நேரு பண்டிதர் விளக்கம் தந்திருக்கிறார்.

மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

"அகில இந்திய பத்திரிகை ஆசிரியர்கள் மாநாட்டினர், இது போன்று, வெளிநாட்டுச் சர்க்கார் உதவி பெறும் பத்திரிகைகளின் பெயரையும், வெளிநாட்டுச் சர்க்கார்களின் பெயர்களையும் குறிப்பிட்டுக் கூறுமாறு கேட்டிருக்கின்றனர்; இது சாத்தியமில்லாத ஒன்று! ஏனெனில், பல வெளிநாடுகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கும் ஒரு விவகாரமாகும் இது! இதுபோன்றதொரு நிலையைத் தவிர்க்க, ஏற்கனவே தகுந்த நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்; மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறோம்; என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம் என்பதையும் வெளியிடுவதற்கில்லை.

"நான் திரும்பவும் கூறவிரும்புகிறேன்—எந்த வெளிநாட்டுச் சர்க்காரும் பத்திரிகைகளுக்கு பண உதவிசெய்வதாக நான் கூறவில்லை என்று!

"நான் குறிப்பிட்டதெல்லாம், சில வெளிநாட்டுச் சக்திகளைத்தான்! இது குறித்து, எத்தகைய தவறான கருத்துப் பரவியிருந்தாலும் அது இப்போது நீங்கிவிடும் என்று நம்புகிறேன்."

வள்ளுவரின் அறவழி

வடமொழியாளர் கூற்றுக்குச் சூடு

"வடமொழியாளர்கள் அறம், பொருள், இன்பம், வீடு இந் நான்கினையும் தர்மார்த்த காம மோட்சம் என்று பெயரிட்டு, முதலில் உள்ள மூன்றினையும் தனித் தனியே பிரித்துத் தனி நூல்களாகச் செய்துள்ளனர். இக் கருத்தினைக் கொண்டுதான் திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்று தாமியற்றிய நூலில் வகுத்துரைத்தார் என்று கூறுவது தவறு. திருவள்ளுவரைப் பார்த்து வடமொழியாளர் வகுத்துரைத்தார் இக்கருத்துக்களை என்றுரைத்தால் என்ன? திருவள்ளுவர் அறம்—பொருள்—இன்பம் ஆகிய மூன்றினையும் ஒன்று சேர்த்துத்தான் நூல் செய்துள்ளார். பொருளை அறத்தின் வழி நின்றும், இன்பத்தை அறத்தின் வழிநின்றும் அடைய வேண்டும் என்பது வள்ளுவரின் கருத்து. எல்லாவற்றிற்கும் அறமே அடிப்படையாகும். அறவழி சென்றால்தான் 'புகழை அடைய முடியும். வடமொழியாளர்களில் 'கௌடில்யர்! 'பொருளை அறவழி தவறிக் கோடலாம்' என்று கூறுகின்றார் ஆனால் வள்ளுவர், 'பொருளை அறத்தோடு தேட வேண்டும்; அறவழியிலே வந்த பொருள் நிலைத்து நிற்கும்; அவ்வழியில் வாராப் பொருள் நில்லாது நீங்கிவிடும்,' என்று கூறுகின்றார். அதனை,

"சலத்தால் பொருள் செய்து
ஏமார்த்தல் பசுமண்
கலத்துள் நீர்பெய்து இரீ
இயற்று"

என்பதில் விளக்குகின்றார். திருவள்ளுவர் அறத்தை தனிமனிதனுக்கு (Individual) ஒரு வகையிலும், நாட்டை ஆளும் தலைவனுக்கு (Society) ஒரு வகையிலும் கூறுகின்றார். இக் கருத்தினைக் கொள்ளாது, குறளில் கருத்து மாறுபாடுகள் காணப்படுகின்றன என்று கூறுவது சரியன்று,"

என்று திரு. மு. அண்ணாமலை (தமிழ் விரிவுரையாளர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்) அவர்கள் 17-6-56-ல் புதுக்கோட்டை திருக்குறள் கழகச் சார்பில் நடைபெற்ற இலக்கியக் கூட்டத்தில், 'அறமே தொடக்கம்' எனும் தலைப்பில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

கூட்டத்தொடக்கத்தில் கழக சொற்பயிற்சி மன்ற மாணவர் திரு. மு. மீனாட்சிசுந்தரம் 'வள்ளுவர் கண்ட நாடு' என்னும் பொருள் பற்றிப்பேசினார். புலவர் நடராசன் நன்றி நவின்றார்.

பலமுறை தேஷ்முக் பயமுறுத்தினாராம்!

பிரதமர் நேருவுக்கு பொறுக்க முடியாமற் போய்விட்டதாம்

"இந்தியாவின் நிதி அமைச்சரான தேஷ்முக் இராஜினாமாச் செய்தது துரதிர்ஷ்டவசமானது; 'விலகிவிடுவேன், விலகிவிடுவேன்!' என்று பலமுறை தேஷ்முக் பயமுறுத்தியுள்ளார்; இது நேருவுக்கு பொறுக்க முடியாமற் போயிருக்க வேண்டும்," என்று, 'மாஞ்செஸ்டர் கார்டியன்' பத்திரிகை எழுதியிருக்கிறது.

'மிக முக்கியமான சமயத்தில் — இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் துவக்கப்படும் நேரத்தில் தேஷ்முக் விலகுகிறார். திட்டத்தில் உள்ள கருத்து வேற்றுமை காரணமாக அவர் விலகவில்லை; உள்ளூர் சம்பந்தப்பட்ட பம்பாயின் எதிர்காலம் பற்றி வருத்தமுற்று விலகுகிறார். பம்பாய் பிரச்சினை, மத்திய அரசினரால் முடிவு செய்யப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாக மாறியது துரதிருஷ்டவசமானதும், எதிர்பாராததுமாகும்," என்றும் அவ்விதழ் கூறுகிறது.

இலங்கைத் தமிழர்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'காளை மாடு மிரண்டு ஓடுவதை, பட்டாசு கொளுத்திய சிறுவன் வேடிக்கையாகப் பார்த்துச் சிரித்து மகிழுவதைப்போலத் தான், தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவு செய்த நாமும், முடிவைக் கண்டு மிரண்டு ஓடுகிற 'காமராசர்களை'ச் சிறிது நேரம் வேடிக்கைப் பார்க்கலாம் என்று கருதுகிறோம்.

'சட்டசபைக் கோட்டைவாயில் நான்குபுறமும் திறந்திருக்கும்; நாம் சுலபமாக நுழைந்துவிடலாம்' என்று, காங்கிரஸ் கருதிக்கொண்டிருக்கிறது; அது, இப்போது முடியாது என்பது தெளிவாகிவிட்டது.

'கம்யூனிஸ்டுகள் நல்ல பிள்ளைகளாகிவிட்டனர்; சோஷலிஸ்டுகளைப் பற்றிக் கவலை இல்லை; திராவிடர் கழகம் தேர்தல் பக்கமே வராது; எனவே, நமக்கு எதிர்ப்பு ஏது?' என்று எண்ணிக்கிடந்த காங்கிரசாருக்கு, நமது முடிவு பெரும் ஏமாற்றத்தையும், கலக்கத்தையும் தந்திருக்கிறது.

'தி. மு. கழகம் தேர்தலில் போட்டியிடுவதை நான் வரவேற்கிறேன்,' என்று பேசினாராம், காமராசர்! இவர் என்ன வரவேற்பது? ஜனநாயகம் வரவேற்கிறது! நம்மை உணர்ந்தோர்—நல்ல உள்ளம் படைத்த மக்கள் வரவேற்கின்றனர்!

'வரவேற்கிறேன்' என்று காமராசர் கூறுவதில் நல்ல எண்ணம் துளியும் இருப்பதாகத் தெரியக் காணோமே! 'இவர்கள் தேர்தலில் நிற்பதை வரவேற்கிறேன்' என்று கூறிவிட்டு, அடுத்த கணமே, 'இவர்கள் எல்லாம் ரௌடிகள்—நாத்திகர்கள்' என்று பேசுகிறாரே, இது, நல்லெண்ணத்தையா காட்டுகிறது? நாட்டு மக்களிடத்தில் நம்மைப் பற்றித் தவறான பிரச்சாரம் செய்யப் புறப்பட்டிருக்கிறாரே! 'வரவேற்கிறேன்' என்று கூறுவதின் நோக்கமென்ன? 'வரட்டும், வரட்டும்! இவர்களிடம் என்ன இருக்கிறது? நம்மிடம் எவ்வளவோ பணம் இருக்கிறதே! பார்த்துக்கொள்ளலாம், ஒருகை! ஒழித்துவிடுகிறேன்!' — என்று அவர் கருதுகிறார்போலும்!

தம்மிடம் உள்ள பணத்தை எண்ணிக்கொண்டு காமராசர், பல் விளக்கிக் கொண்டிருப்பதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை.

யார் பெட்டியில் பணம் இருக்கிறதோ அவர்கள்தான், இந்தத் தேர்தலில் பயப்படவேண்டும்!

'இத்தனை ஆயிரம் ரூபாய்க்கு அதிபதியாயிற்றே, நீ; ஒரு ஓட்டுக்கு இரண்டு ரூபாய் தா,' என்று வாக்காளர்கள் கேட்கக்கூடும்—பணம் வைத்திருப்பவர்களை! ஆனால், நம்மை அப்படிக் கேட்க முடியாதே!

நாமோ, நமக்கு வாக்களிப்பவர்களை, நமக்கு ஒரு அணா தந்துவிட்டு அல்லவா, வாக்களிக்கச் சொல்லும் நிலையில் இருக்கிறோம்?

காங்கிரசார் எந்த மூலைக்கு ஓடினாலும் நாம் அவர்களை விடுவதாக இல்லை.

வரப்போகும் பொதுத் தேர்தல், காங்கிரசிற்குக் கடுமையான பலப் பரீட்சையாக இருக்கும் என்பதைத் தான், நமது திருச்சி மாநாட்டு முடிவு கூறுகின்றது.

காங்கிரஸ் சர்க்காரின் மக்கள் நலம் பேணுப் போக்கை, தென்னாட்டு மக்கள் எதிர்க்கிறார்கள்—வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கம் தென்னாட்டைச் சூழ்ந்திருப்பதை எதிர்க்கிறார்கள் என்பது, நேருவுக்குத் தெளிவாகத் தெரிந்தாக வேண்டும், வரப்போகும் தேர்தலின் போது!

வடக்கே உள்ள மக்கள், தங்களின் எண்ணங்களை—சர்க்காரின் அநீதியான போக்கைத் தாங்கள் விரும்பவில்லை என்பதை, கலகத்தாலே, காலித்தனத்தாலே எல்லாம் கூடத் தெரிவித்திருக்கிறார்கள்; ஆனால் நாம், கடமை உணர்வோடு, கண்ணியம் குன்றாமல், தெரிவிக்கப் போகிறோம்!

'தமிழ் நாடு என்றால் அது மிகச் சிறிய மாநிலமாக இருக்கிறது; அப்படி சிறிதாக இருப்பதால், அதனை டில்லி மதிக்கவில்லை; கேரளத்தையும்—கன்னடத்தையும் தமிழ் நாட்டுடன் சேர்த்து, 'தட்சிண ராஜ்யம்' என்ற பெரிய மாநிலம் அமைத்தால் டில்லியில் மதிப்பு ஏற்படும்'—என்று ஆச்சாரியார் பேசுகிறார்; அவருக்கு அனுசரணையாக, காமராசர் மந்திரி சபையில் உள்ள சிலரும் பேசுகிறார்கள்!

காமராசரோ, 'தமிழ் நாடு சிறிதாக இருந்தாலும் பரவாயில்லை' என்று கூறிவருகிறார்.

ஆனால், இருசாராரும் சிறிதோ பெரிதோ—அந்த மாநிலத்தில், டில்லியின் ஆதிக்கம் இருப்பதைப் பற்றி ஏதும் கூறக்காணோம்.

மிட்டாய் பங்கு போட்டுக்கொள்ளும் சிறு பிள்ளைகள், சிறிதா—பெரிதா என்று அடித்துக்கொள்வதைப்போல, இவர்கள், மாநிலம் சிறிதா — பெரிதா என்பதைப் பற்றித்தான் பேசுகிறார்களே தவிர அந்த மாநிலத்து மக்களின் உரிமைகள், நல்வாழ்வு இவை பற்றிப் பேசுவதாகக் காணோம்.

ஆச்சாரியாரும் — காமராசரும், 'தட்சிண ராஜ்யமா-தமிழ் நாடா?' என்று அடித்துக் கொள்ளுகிற நேரத்திலேயே, 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்ற இலட்சியத்தைத்தான், தி. மு. கழகம் வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

தென்னாட்டவர்கள் எல்லாம் திராவிடர் என்றும், அவர்கள் நாடு திராவிட நாடு என்றும், வரலாறு நமக்குச் சொல்கிறது.

அந்தத் திராவிடர்கள் — வடநாட்டவரிடமிருந்து மொழியால், வாழ்க்கை வழியால், பண்பால், பழக்கத்தால் ஆராயும் போது, வேறுபட்டவர்கள் என்பது தெரியவரும். 'இப்படி எல்லா வகையாலும் வேறுபட்ட திராவிட இன மக்களை வடவர் அடிமைப்படுத்தி வைத்திருப்பது கூடாது' என்கிறோம், நாம்!

வடவர் உணவு, கோதுமை—திராவிடர் உணவு அரிசி! அவர்கள் உடுப்பது வேறு வகை—நாம் உடுப்பது வேறு வகை! அவர்கள் பழக்கவழக்கங்கள் வேறு வேறு! நம் பழக்கவழக்கங்கள் வேறு வேறு! அவர்களின் எண்ணங்கள், ஏற்பாடுகள் எல்லாம் வேறு—நம் எண்ணங்கள், ஏற்பாடுகள் எல்லாம் வேறு! இப்படி எல்லாவற்றிலும் வெவ்வேறாக உள்ள திராவிட மக்கள், 1947-க்குப் பிறகு, வடவர் கையில் சிக்கி, வாழ்வு சீரழிந்து சீர்குலைந்து வருகின்றனர் என்பதை நாம் பல ஆதாரங்களோடு எடுத்துக்காட்டி, திராவிடரின் உரிமைகள் திராவிடருக்குத் தரப்பட வேண்டும் என்கிறோம்.

நாம் இப்படிக் கூறும்போது, காமராசர், 'வடநாட்டைக் கண்டு நாம் ஏன் பயப்படவேண்டும்?'— என்று கேட்கிறாராம்!

வடவரைக் கண்டு நாம் பயப்படுகிறோம் என்பதல்ல! நமது இலட்சியத்தின் மூலகாரணம், நமக்கு, நம் உடைமையிடத்தில் உள்ள பிரியம்—உரிமைவேண்டும் என்ற தாகம்—நாட்டின்மீதுள்ள பற்று—மானத்தின் மீதுள்ள கவலை இவைகள்தான்! இதனைக் 'காமராசர்கள்' புரிந்துகொள்ளவேண்டும்!

'மாநிலம் சிறிதா — பெரிதா?' என்று அடித்துக்கொள்கிறவர்கள், எதற்கெடுத்தாலும், 'எங்களுக்கும் கொஞ்சம் தாருங்கள்' என்று டில்லியை நோக்கி கை நீட்டவேண்டியுள்ளது பற்றி ஏன் சிந்திப்பதில்லை?'

கழகக் கூட்டம்

★

பெரியபுத்தூர்

25-6—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

சிற்றுளி-சுப்பிரமணியம்

கே. எஸ். அமிர்தம்

வகுப்புகளில் இடநெருக்கடி!

பள்ளிகளுக்கு சர்க்கார் உத்திரவு

சென்னை, ஜூன் 22—

இவ்வாண்டு ஏராளமான மாணவர்கள் பள்ளியில் சேர மனுச் செய்துள்ளதால் இவ்வாண்டும் ஒவ்வொரு வகுப்பிலும் 45 மாணவர்களை சேர்க்க அனுமதிக்கப்படும் எனத் தெரிவித்து மாநிலத்திலுள்ள பள்ளிகள் எல்லாவற்றிற்கும் சென்னை அரசியலார் கடிதம் எழுதியுள்ளனராம். பள்ளியிலுள்ள வகுப்புகளில் சாதாரணமாக 40 மாணவர்கள்தான் அனுமதிக்கப் பட்டிருந்தனர்.

சிறுமியின் இரத்தத்தை காளிக்கு காணிக்கையாக்கிய 'சாது'

தீவாந்திர தண்டனை பெற்றார்

அரா (பீகார்), ஜூன் 22—

சென்ற அக்டோபர் திங்களில் ஷகாபாத் மாவட்டத்திலுள்ள ஜெய்ப்பூர் கிராமத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்த 8 வயது சிறுமியை கடத்திச் சென்று, அச்சிறுமியைக் கொன்று, இரத்தத்தை காளிக்கு காணிக்கையாக்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்டிருந்த ஜாவகர் தேவாரி என்ற 'சாது' வேடதாரிக்கு, அரா அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி, ஆயுள் தீவாந்திர தண்டனை விதித்துள்ளார்.

காப்பியடித்ததால் ஏற்பட்ட விளைவு!

கர்நூல், ஜூன் 22—

எஸ். எஸ். எல். ஸி. தேர்வில் 'காப்பி'யடித்ததாக சந்தேகிக்கப்பட்டு, கிருஷ்ணா, குண்டூர், விசாகப்பட்டினம், கடப்பை ஆகிய மாவட்டங்களிலுள்ள 21 உயர்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களின் தேர்வின் முடிவுகள் அரசியலாரால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனவாம்.

'அணு ஆராய்ச்சித் துறையில், ரஷ்யா, இன்னும் பத்து ஆண்டுகளில் உலகின் மற்றைய நாடுகளை விட அதிக அளவு மிஞ்சிவிடும் என்று, ரஷ்ய விஞ்ஞான ஆய்வுக்கூடங்களைப் பார்வையிட்டுவிட்டுத் திரும்பியுள்ள அமெரிக்க விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

குண்டூர், விஜயவாடா நகர சபைகள்

ஆந்திர சர்க்கார் கலைத்து விட்டது

குண்டூர், விஜயவாடா நகரசபைகள் கலைக்கப்பட்டுவிட்டன என்று தெரிகிறது.

இந்தத் தகவலை முதன் மந்திரி கோபால(ரெட்டி) பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

'ஏன் கலைக்கக் கூடாது என்பதற்கான காரணம் காட்டுக' என்று சர்க்கார், அந்த நகரசபைகளுக்கு அனுப்பியிருந்த நோட்டீசிற்கு பதில் வந்த பின்னரே, சபைகள் கலைக்கப்பட்டதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு நகரசபைகளின் நிர்வாகத்தையும் கண்காணிப்பதற்காக விசேட அதிகாரிகள் நியமிக்கப்படுவர் என்றும், தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

முதல்தர நகரசபைகளான குண்டூர், விசாகப்பட்டினம் இரண்டும் இப்போது, 'செலக்ஷன் கிரேடு' நகரசபைகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன என்றும், முன்பு விஜயவாடா மட்டுமே அந்த நகரசபையாக இருந்தது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'அரசாங்கத் துறைக்கு ஆட்கள் சேர்ப்பதில் பல்கலைக் கழகப் பட்டம் அவசியமா?' என்ற பிரச்சினை குறித்து பரிசீலனை செய்து, இராமசாமி (முதலியார்) குழு, அறிக்கை தந்திருக்கிறது. இவ்வறிக்கை மீது மாநில சர்க்கார்களின் கருத்தும், ஆலோசனைகளும் கோரப்பட்டுள்ளன.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திருமழிசை தி. மு. கழக 3-வது ஆண்டுவிழா

1—7—56 ஞாயிறு மாலை 6-மணிக்கு

பெருமாள் கோவில் அருகில் நடைபெறும்

★

தலைவர்: தோழர் டி. கே. பேரூரான்

அண்ணா, என். வி. நடராசன்,

டி. சண்முகம் M.L.A. சி. வி. எம். அண்ணாமலை

பேசுவர். அனைவரும் திரண்டு வருக. —தி. மு. கழகம், திருமழிசை

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கிளைக் கழகச் செயலாளர்களுக்கு:

★

தி. மு. கழக உறுப்பினர் உரிமைச் சீட்டு, 22—6—56 முதல் அந்தந்த கிளைகளுக்குத் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டு வருகிறது.

கிளைக் கழகச் செயலாளர்கள், அந்தந்த உறுப்பினர்களுக்கு உரிமைச் சீட்டை உடனடியாக வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

என். வி. நடராசன்

துணைப் பொதுச் செயலாளர்

தி. மு. கழகம்

'அறிவகம்'

சென்னை-13

22-6-56

★★★★★★★★★★★★★★★★★

பூவிருந்தவல்லி தி. மு. கழக வழக்கு நிதிக்காக

சிறப்புக்கூட்டம்

★

24—6—56 காலை 9-மணியளவில், பூவிருந்தவல்லி விக்னேஸ்வரா தியேட்டரில், தோழர் டி. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும்.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் '2-வது மாநில மாநாடும்—அதன் முடிவும்' எனும் தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் 'கலையும் வாழ்வும்' என்ற தலைப்பில் பேசுவார்.

குணச்சித்திர நடிகர் எம். ஜி. சக்கரபாணி கூட்டத்தில் கலந்து கொள்ளுவார்.

டிக்கட்:

ரூ. 1; அணா 8; பெண்கள் அணா 4.

வண்ணை—தமிழ் இளைஞர் கழகம்

24—6—56 காலை 10-மணிக்கு சென்னை—வண்ணை தனலட்சுமி உயர்தர ஆரம்பப்பள்ளியில், திரு வெ. சு. சுப்பிரமணிய ஆச்சாரியார் அவர்கள், திருக்குறளில, 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தை விளக்குவார்.

சென்னைக் கல்விச் சங்கம்

24—6—56 மாலை 5 மணியளவில், பட்டாளம், ஸ்ட்ரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில் 'கடமை' என்னும் பொருள்பற்றி திரு. த. வே. முருகேசனார் தலைமையில், திரு. வ. சுப்பிரமணியம் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

24—6—56 காலை 10 மணியளவில், சென்னை 39-வது வட்ட தி மு கழகப் பணிமனையில், தோழர் அன்பரசு தலைமையில் 'பணியும் பயனும்' எனும் தலைப்பில், சொற்பயிற்சிக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

24—6—56 காலை 10 மணியளவில் பெங்களூர்—அலசூர் முயற்சி மன்ற சார்பில், 'பூதான இயக்கமும், நிலச் சீர்திருத்தமும்' எனும் தலைப்பில், தோழர் இரா. கோபால் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

24—6—56 காலை 9-மணியளவில் சென்னை—குயப்பேட்டை (24-வது வட்டம்) இராமாநுச தோட்டத் தெருவிலுள்ள திரு-வி. க. மறுமலர்ச்சி மன்ற மனையில் தோழர் அ. உ. நடராசன் தலைமையில் 'தி. மு. க-வும் பொதுத்தேர்தலும்' எனும் தலைப்பில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

இலக்கியச் சொற்பொழிவு

இராயபுரம் இலக்கிய மன்ற சார்பில், 24-6-56 காலை 9-30 மணிக்கு பனைமரத் தொட்டி, அட்டாளையம் பஜனைக் கோவிலில் ஓர் இலக்கிய சொற்பொழிவுக்கூட்டம் நடைபெறும். திரு கு. பெ. துரைசாமி தலைமையில் 'பேச்சுக்கலை' எனும் பொருள் குறித்து திருவாளர்கள் பி. பொன்ரங்கம், ம. செல்வராசன், சோமு முதலியோர் பேசுவர்.

பலகட்ட விற்பனை வரி விதிப்பிற்கு எதிர்ப்பு

ஒரு வேண்டுகோள்

பலகட்ட விற்பனை வரி விதிப்பை எதிர்த்து, வரும் ஆகஸ்டு 26-ந் தேதி தேதியன்று நடைபெறவிருக்கும் மாநாட்டை ஒட்டி கொத்தவால்சாவடி கடைத் தெரு வியாபாரிகள் 26—6—56 செவ்வாயன்று ஒரு பிரச்சாரப் பொதுக் கூட்டம் நடத்துகின்றனர் என்றும், அன்று ஜியார்ஜ் டவுன் பிரதேசத்தில் உள்ள கடைகள் எல்லாம் மூடப்படும் என்பதால், மக்கள், முன்பாகவே தங்களுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக் கொள்ளுமாறு கோரப்படுகிறார்கள் என்றும், சென்னை உணவுப் பொருள் வர்த்தகர் சங்க கௌரவ காரியதரிசி அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.